# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

01.08.2020 சனிக்கிழமை




சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
விலை 10/=
01.08.2020 சனிக்கிழமை

# ஒகஸ்ட் 11 இல் புதிய அரசு!

கொழும்பு, ஓக.1
எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் பொதுத் தேர்தலில் ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் ஒகஸ்ட் 11 ஆம் திகதி பதவியேற்கும் எனவும், அன்றைய தினமே அமைச்சரவையும் பதவியேற்க உள்ளது எனவும் தெரியவருகின்றது.
அமைச்சரவை பதவியேற்பதற்கு முன்னர் புதிய அரசின் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்வார். அத்துடன் புதிய

6

# சந்திரகுமார் அணி துப்பாக்கிச் சூடு

## கண்டாவளையில் அடாவடி

கிளிநொச்சி, ஓக.1
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் முன்னாள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகுமாரின் சுயேச்சைக்குழு ஆதரவாளரால் , திடீரென மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்

6

## புதினம் தெரியுமோ?

கடைசிக் கட்ட தேர்தல் பரபரப்பில் நாடே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தநிலையில் ஒரு முக்கியமான கட்சி ஒன்றின் வேட்பாளர் தனது சொந்தச் செலவில் பெருமெடுப்பில் பரப்புரைக் கூட்டமொன்றுக்கு ஒழுங்கு செய்தார். அந்த வேட்பாளரே கூட்டம் நடைபெறும் பகுதி உள்ளடக்கப்படும் தொகுதிக்கான கட்சியின் பிரதான அமைப்பாளரும் கூட. அதனால் அந்த வேட்பாளர், கட்சியின் இன்னொரு முக்கியஸ்தரை கூட்டத்துக்கு தலைமை தாங்க அழைத்தார். அவரும் வந்துள்ளார். கூட்டம் திட்டமிட்டபடியே ஆரம்பித்தது. மக்களும் பெரும

6

## பெரிய வெங்காய வரி அதிகரிப்பு

கொழும்பு, ஓக.01
பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி நிதி அமைச்சினால் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கு அறவிடப்படும் விசேட பண்டங்களுக்கான வரி 15 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வரி அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.(அ)

# அதிகாரப் பகிர்வுக்கு அவசியமேயில்லை!

## சிங்கள இனவாதக் கட்சி இறுமாப்பு

**கொழும்பு, ஓக.1**
**“இலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களால் அநீதி இழைக்கப்படவில்லை. எனவே, அதிகாரப்பகிர்வு என்பது அவசியமில்லை. தன்னாட்சி கோரும் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தையும் முற்றாக நிராகரிக்கின்றோம். இது தொடர்பில் கூட்டமைப்புடன் பகிரங்கமாக விவாதம் நடத்துவதற்கு நாம் தயார்."**

6



## படையினரின் சோதனை தீவிரம்

யாழ்ப்பாணம், ஓக.01
பொதுத்தேர்தலுக்கு இன்னும் 4 நாள்களே உள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பிரிவினரால் நேற்று முதல் திடீர் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி , முட்டாசுக் கடைச் சந்தியில் இரு பக்கங்களிலும் வீதித்தடை

6

# தனிமைப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு பிரசவம்!

## தாயும் சேயும் நலம்



சவூதி அரேபியாவில் இருந்து,அழைத்து வரப்பட்டு, விடத்தல்பளையில் தனிமைப்படுத்தலுக்குள்ளான கர்ப்பவதி ஒருவர் குழந்தை ஒன்றை நேற்று பிரசவித்துள்ளார்.
அந்தக் குழந்தை சுகதேகியாக இருப்பதாக, யாழ். போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றிய திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த

6

# இலங்கை மீது இன்னும் குற்றச்சாட்டுகள் உள்ளன!

## அதிலிருந்து விடுபட ஆணை கேட்கிறார் அமரசேகர



கொழும்பு, ஓக. 1
”ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானத்துக்கு வழங்கியிருந்த இணை அனுசரணையில் இருந்து மாத்திரமே இலங்கை விலகியுள்ளது. ஆனாலும், குற்றச்சாட்டுகள் அவ்வாறே உள்ளன. எனவே, குற்றச்சாட்டுகளில் இருந்தும் முழுமையாக விடுபடும் வகையில் அரசாங்கத்துக்கு சிங்கள, பௌத்த மக்கள் ஆணை வழங்கவேண்டும்." என்று

6



## ஷானி அபேசேகர விளக்கமறியலில்

கொழும்பு, ஒக 1

குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கம்பஹா நீதவான் முன்னிலையில் அவர் நேற்று இரவு ஆஜர்ப டுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

ஷானி அபேசேகர கொழும்பு குற்றவியல் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய் யப்பட்டு 8 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து அவர் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டார். (ரி1)

# கொரோனாவை ஒழிப்பதற்கு இலங்கையுடன் கைகோர்க்கத் தயார்

### கொழும்பில் நடந்த நிகழ்வில் சீனா அறிவிப்பு

கொழும்பு, ஒக. 1

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்ப டுத்தி, அதனை முற்றாக இல்லாதொழிப்பதில் இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீனா தெரி வித்துள்ளது.



சீனத்தூதரகமும், 'பாத் ஃபைண்டர் பவுண்டே ஷன்' அமைப்பும் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 'கொவிட் 19 கட்டுப்பாடு மற்றும் தடுப்பு' என்ற நூலின் சிங்கள மொழி பெயர்ப்பு நூலை வெளியிட் டுள்ளன.

இந்தச் சிங்கள மொழிபெயர்ப்பு நூலின் முதற்பிரதி சீனத்தூதரக விவகாரங்களுக்குப் பொறுப் பான அதிகாரி ஹுா வே மற்றும் பாத் ஃபைண்டர் பவுண்டேஷன் அமைப்பின் முன்னாள் பணிப் பாளர் லக்ஷ்மன் சிறிவர்தன ஆகியோரால், சுகாதார அமைச் சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி லக்ஷ்மி

சோமதுங்க மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலா ளர் அனுஷா பெர்னாண்டோ ஆகியோரிடம் கையளிக்கப்பட் டது.

இதன்போது 'கொவிட் 19 கட்டுப்பாடு மற்றும் தடுப்பு' என்ற நூலை மொழி பெயர்ப் பதற்கான பதிப்புரிமையை இலவசமாக வழங்கிய சீனப் பங்காளர்களுக்கு நன்றி தெரி வித்த லக்ஷ்மன் சிறிவர்தன, கொரோனா வைரஸ் தொற்றுநோயின் பின்னர் இருநாடுகளுக் கும் இடையிலான நட்புறவும் ஒத்துழைப் பும் மேலும் வலுவடை யும் என்ற நம்பிக்கையுள் ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கை மற்றும் சீன நாடுகளின் சுகாதாரத் திணைக்களங்களுக்கு இடையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டு வரும் இணக்கப்பாடு மற்றும் அண்மைக்காலமாக சீனாவினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் மருத்துவ உதவிகள், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் அனுபவப்பகிர்வு ஆகியவை பெரிதும் வரவேற்கப்பட வேண்டி யவையாகும் என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலா ளர் தெரிவித்துள்ளார். (ரி2)

## 25 கோடி பெறுமதியான ஹெரோய்னுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஒக.1

கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், இரண்டு மாடி வீடொன்றில் வைத்து இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவ் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டி ருந்த 25 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியான 25 கிலோ கிராமுக்கு மேற்பட்ட ஹெரோய்ன் போதைப் பொருள் மற்றும் 3.8 ரக ரிவோல்வர் துப்பாக்கி என்பன அதிரடிப்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹெரோய்ன் கைப்பற்றப்பட்ட வீடு இந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ள பாதாள உலகக்குழு உறுப்பினரான புகுடு கண்ணா என்பவரது தம்பியின் வீடு எனத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்து டன் கைதுசெய்யப்பட்டவர் கொம்ப னித்தெருவைச் சேர்ந்த 25 வயதான நபர் எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## கொரோனா ஆபத்து குறையவில்லை

### எச்சரிக்கின்றது சுகாதாரப் பிரிவு

கொழும்பு, ஒக 1



இலங்கையில் கொரோனா ஆபத்துக்கள் இன்னமும் குறையவில்லை என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. கொரோனா நோயாளர்களை அடையா ளம் காணுவதற்கான பி.சி.ஆர் பரிசோத னைக்காக இதுவரையில் 1.3 பில்லியன் ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளது என்று சுகாதார பணிப்பா ளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டில் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து இதுவரையில் குறைய வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் நாடு முழுவதும் பரவலாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என தெரி விக்கப்பட்டுள் ளது. இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட 413 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக 1

தெமட்டகொடை பிரதேசத் தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றில் போதைப்பொருள் கடத்தலு டன் தொடர்புடைய சந்தேகநப ரொருவரை கைது செய்துள்ள னர். கைதுசெய்யப்பட்ட நபரின் வீட்டிலிருந்து 140, 000 அமெரிக்க டொலரும் மற்றும் 5 கோடியே 80 இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள் ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ள னர். (ரி1)

கிரிதலேகம மத்திய மகா வித்தியாலய

## ஆசிரியர்கள், மாணவர்கள் சுயதனிமைப்படுத்தலில்

பொலநறுவை, ஒக.1

பொலநறுவை, கிரிதலேகம மத்திய மகா வித்தியால யத்தில் கற்கும் 450 மாணவர்கள் 82 ஆசிரியர்கள் மற்றும் 7 ஊழியர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். லங்காபுர பிரதேச செயலகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியுடன் நெருங் கிப் பழகிய ஆசிரியர் ஒருவர் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் இதுவரை சுயதனிமைப்படுத்தப்பட் டுள்ள நிலையில் அவர் கடந்த நாள்களில் பாடசாலை களில் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)





கிளிநொச்சி நகரின் பல பகுதிகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் கழிவுப் பொருள் களை சுகாதார நடைமுறையைப் பின்பற்றாமல் பல இடங்களிலும் கொட்டிவருகின் றனர். இதன் காரணமாக பல தொற்று நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை தாமே உரு வாக்கி வருகின்றனர் எனவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நட வடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர். (ரி3-113)

# 44 நாள்களில் நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 3,698 பேர் கைது

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

கொழும்பு, ஓக 1

நாடளாவிய ரீதியில் கடந்த 44 நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஒரு இலட்சத்து 3698 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் நாடுமுழுவதிலும் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டுவருகின்றனர். இதற்கமைய கடந்த மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆறு மணிமுதல் நேற்று வியாழக்கிழமை காலை ஆறு மணி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையோர் என்று கூறப்படும் நபர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 24 ஆயிரத்து 412 சந்தேக நபர்களுள் 13 ஆயிரத்து 346 சந்தேகநபர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 17 கிலோ 42 கிராம் 737 மில்லி கிராம் தொகை ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சா போதைப் பொருளுடன் 9333 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 787 கிலோ 773 கிராம் 385 மில்லி கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடனும் 733 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு கிலோ 456 கிராம் 534 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 21ஆயிரத்து 397 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 5 இலட்சத்து 36 ஆயிரத்து 709 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 255 பேர் கைது செய்யப்பட்டனர். ஆயுதங்கள் வைத்திருந்தனர் என்று 235 பேரும், வெடிமருந்துகளை வைத்திருந்தனர் என்று 20 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 30 குழல் 12 ரக துப்பாக்கிகளும், 33 உள்நாட்டு துப்பாக்கிகளும், 125 ரிபிடர் ரக துப்பாக்கிகளும், 2 வேறுவகை துப்பாக்கிகளும், 8 கைத்துப்பாக்கிகளும், 14 ரி 56 ரக துப்பாக்கிகளும், ரி 81 ரக துப்பாக்கி ஒன்றும், ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் இரண்டும், 1808 தன்னியக்க தோட்டாக்களும் மற்றும் 12 வாள்களும், 9 கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை 367 கிராம் தொகை வெடி மருந்து, 28 டெட்டனேட்டர்கள் மற்றும் 36 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 20,384 சந்தேக நபர்களும், வேறுவகையான குற்றச்செயல்களைப் புரிந்த 38250 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி1)

சாவகச்சேரியில்

## உரிமை கோரப்படாத சடலம் அரச செலவில் அடக்கம்

சாவகச்சேரி, ஓக.1

சாவகச்சேரி நகரில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்த நபரின் சடலம் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில், சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு பதினைந்து தினங்கள் ஆகியும் இன்னமும் உரிமைகோரப்படவோ, அடையாளம் காட்டப்படவோ இல்லை. எனவே சடலம் அரச செலவில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி சாவகச்சேரி ரயில் நிலையம் அருகில் யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சடலத்தை மருத்துவமனையில் ஒப்படைத்தனர். சடலம் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் அதனை அரச செலவில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மருத்துவமனை நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி3-9)



கிளிநொச்சி பெரியகுளம் பகுதி பல வருடகாலமாக புனரமைப்பு செய்யப்படாமையால் குளத்தின் உட்பகுதிகள் மற்றும் அணைக்கட்டு பகுதி என்பவற்றில் பற்றைகள் வளர்ந்துள்ளன. அங்கு பல குற்றச்செயல்கள் நடந்து வருகின்றன எனவும் இரவு வேளைகளில் அப் பகுதியூடாக செல்லும் மக்கள் அச்சத்துடன் செல்லவேண்டிநிலை ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் மழைகாலங்களில் மழைநீர் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் உட்புகுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி3-113)

## இடியுடன் கூடிய மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, ஓகஸ்ட் 1

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மத்திய மாகாணங்களிலும், காலி மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் மாகாணத்திலும் பொலன்னறுவை, மன்னார், திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காங்கேசந்துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் அவ்வப்போது கடல் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும். கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ரி2)



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேசத்தில் பெருநாள் தொழுகையும் பெருநாள் கொத்பா பேருரையும் ஹைராத் பள்ளிவாசலில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.றிஸ்வி தலைமையில் நடைபெற்றன. இதன்போது நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நல்லாசி வேண்டியும், கொரோனா நோயிலிருந்து உலக மக்களை பாதுகாக்குமாறும் வேண்டி துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. (ரி3-150)



இஸ்லாமியர்களின் ஹஜ் பெருநாள் நிகழ்வுகள் இன்று காலை வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. வவுனியா தௌஹீத் ஜமாத் அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட தொழுகை நிகழ்வு பட்டானிச்சூர் குடா வயல் திடலில் மௌலவி ஏ. தஸ்னீம் (தைமீ) தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அதிகளவான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.(ரி3-110)



மன்னார் மாவட்ட பள்ளிவாசல்களில் புனித ஹஜ் பெருநாள் விசேட தொழுகைகள் இன்று காலை இடம்பெற்றன. மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் மௌவி எம்.அசீம் தலைமையில் பெருநாள் தொழுகை இடம்பெற்றது. பெண்களுக்கான சிறப்புத் தொழுகை காலை 7 மணிக்கும் ஆண்களுக்கான தொழுகை காலை காலை 7.45 மணிக்கும் நடைபெற்றன. பெருநாள் தொழுகைகள் சுகாதார முறைப்படி சமூக இடைவெளிகளைப் பேணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3-56)

# பெண்கள் பிரதிநிதித்துவ தரப்படுத்தலில் இலங்கை 182 ஆவது இடத்தில்

கொழும்பு, ஓகஸ்ட் 1

சர்வதேச ரீதியில், நாடாளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிலான தரப்படுத்தலில் 193 நாடுகளில் இலங்கை 182 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை நாடாளுமன்றத்தில் நூற்றுக்கு 5 சதவீத பிரதிநிதித்துவமே காணப்படுகிறது.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலில் பிரதான கட்சிகள் சார்பில் போட்டியிட களமிறக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர்களது விவரங்களை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான Manthri.lk வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, பொதுஜன பெரமுன சார்பில் 14 பெண் வேட்பாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 15 பெண் வேட்பாளர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 10 பெண் வேட்பாளர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 16 பெண் வேட்பாளர்களும்,

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 4 பெண் வேட்பாளர்களும் களமிறக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# ரிஷாத்துக்கு எதிரான வில்பத்து வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 1

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்பட ஐவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு திகதி அறிவிப்பு இன்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வில்பத்து சரணாலயத்தில் காட்டின் ஒரு பகுதியை அழித்து சட்ட விரோதக் கட்டுமானங்கள் மற்றும் மீள் குடியேற்றத்தை முன்னெடுத்தனர் எனக் கூறப்படும் விடயம் தொடர்பிலான வழக்கின் தீர்ப்பே இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் இந்த ரிட் மனு தொடர்பிலான தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஜனக்க டி சில்வா, நிஷங்க பந்துல கருணாரத்ன ஆகியோரால் அறிவிக்கப்படவிருந்த நிலையிலேயே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நேற்று இந்த நீதிபதிகள் இருவர் உள்ளடங்கிய அமர்வுகள் எவையும் இடம்பெறவில்லை.

இதனால் மேன் முறையீட்டு நீதிமன்றின் 204 ஆம் இலக்க விசாரணை அறையில் நேற்று விசாரிக்கப்படவிருந்த அனைத்து வழக்குகளும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் ஈடுபடுங்கள்

## மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஓகஸ்ட் 1



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அனைவரும் நேரம் ஒதுக்கி தமது ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் ஈடுபடவேண்டும் என்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு ஜோசப் ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் அரசியல் சார்பற்றவன். எந்த அரசியல் கட்சிகளையும் சாராதவன். அரசியலுக்கு அப்பால் எல்லா மதங்களுக்கும் பொதுவாகவே சேவை புரிந்து வருகின்றேன். வாக்களிப்பது மனித உரிமை. அது எமது கடமையுமாகும்.
சிறையிலிருப்பவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை அரசு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தவன். மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் சிரமத்தில் வாக்களிப்பதில்லை. பலரது வாக்குகள் நிராகரிக்கப்படுபவையாகவும் காணப்படுகின்றன. இவற்றை நன்றாகக் கவனத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும்.

பொதுமக்கள் நன்றாக சிந்தித்து பொருத்தமானவர்களை நீங்களே தெரிவு செய்யவேண்டும். எவ்வளவு கஷ்டமான வேலைகள் இருந்தாலும் நீங்கள் அனைவரும் கட்டாயம் நேரமொதுக்கி வாக்களிக்க வேண்டும். நான் சிவில் சமுகத்தின் போசகராக செயற்பட்டு வருகின்றேன். இனவாதம், மதவாதம், மொழிவாதம் இருக்கக்கூடாது. அதனைத் தவிர்க்கவேண்டும். வேட்பாளர்கள் வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும், இதனை ஊடகங்கள் மக்களிடையே கொண்டு செல்லவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)



# கன மழையால் வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ் குடாநாட்டில் நேற்று அதிகாலை பெய்த கனத்த மழையினால் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்ந்த விவசாய நிலங்களில் வெள்ளமும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வலிகாமம் கிழக்கு பகுதியில் அநேகமான இடங்களில் வெங்காயப் பயிர்கள் கடுமையான மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் அறுவடை செய்யப்பட்டு வெயிலில் காய வைக்கப்பட்ட வெங்காயப் பயிர்கள் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வெங்காயச் செய்கையாளர்கள் நஷ்டமடைந்துள்ளனர். இதேவேளை, காலநிலை வேறுபாட்டினால் சின்ன வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று வெங்காயச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி3)

# யாழ். விவசாய திணைக்களத்தினால் மிளகாய் விதைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ் குடாநாட்டில் மிளகாய் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இலவசமாக மிளகாய் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

எம்.ஐ2, கே.ஏ.2 ஆகிய இனத்தைச் சேர்ந்த நூறு கிலோ வரையிலான மிளகாய் விதைகள் செய்கையாளர்களுக்கு விவசாய திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு உள்ளன. இதே வேளை, யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் மாதங்களில் பச்சை மிளகாயின் விலை குறைவடையலாம் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ரி3-17)





லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதி உதவியுடன், வெளிச்சம் அறக்கட்டளையால் பாடசாலை மாணவர்களுக்கு முகக் கவசங்கள் வழங்கும் திட்டத்தின் ஐந்தாவது கட்டமாக, வவுனியா கருங்காலிக்குளம் அ.த.க.பாடசாலை மற்றும் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான முகக் கவசங்கள் நேற்றுமுன்தினம் பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கப்பட்டன. (ரி3-222)

# தென்மராட்சி வலய மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாக பெற்றோர் விசனம்

சாவகச்சேரி, ஓக.1

தென்மராட்சி கல்வி வலயத்தில் விஞ்ஞான பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகள் ஆறு மாதங்களுக்கு மேலாக வெற்றிடமாக உள்ளமையால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் யாழ்.கல்வி வலயப் பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர் எனவும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் இதுவரை இப் பதவிகளுக்கு எவரும் மாற்றீடாக நியமிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில், தென்மராட்சி வலயத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன எனவும், மாணவர்களின் கற்றல் வளங்களைக் கருத்திற்கொண்டு. கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் போன்றோர் மூலம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் தெரிவித்தனர். (ரி3-9)

# அதிகாரப் பகிர்வுக்கு....

இவ்வாறு சிங்கள தீப ஜாதிக பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் ஜயந்த லியகனே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, " அதிகாரப்பகிர்வு இடம்பெறவேண்டும், நாடு பிளவுபடக்கூடாது என்பதே நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகளினதும், அரசசார்பற்ற அமைப்புகளினதும் கருத்தாக இருந்துவருகின்றது. இக்கருத்துடன் நாம் உடன்படவில்லை. அதிகாரங்களை பகிரும் அளவுக்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்னவென கேட்க விரும்புகின்றோம்.

1983 இல் ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்க பிரிவிலுள்ள குண்டர் குழுவே தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தினர். இதற்காக ஒட்டுமொத்த சிங்கள மக்கள்மீதும் குறைகூறுவது நியாயமா? இவ்வாறு தம்மை தாக்கிய தரப்புக்கே தமிழர்கள் வாக்களித்தும் வரும்நிலைமை காணப்படுகின்றது.

அதேவேளை, மாகாணசபை முறைமை முற்றாக நீக்கப்படவேண்டும் என்பதிலும் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதிகாரப்பகிர்வு மட்டுமல்ல, மாகாணசபையில் உரிய வகையில் நிர்வாகம் இடம்பெறுவதில்லை. உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக பெருமளவு நிதி செலவிடப்படுகின்றது. இவை உட்பட மேலும் சில காரணங்களாலேயே நாம் மாகாணசபை முறைமைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம்.

நாம் ஒருபோதும் தன்னாட்சியை ஏற்கப்போவதில்லை. ஒற்றையாட்சி முறைமையே தொடரவேண்டும். எனவே, கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை நிராகரிக்கின்றோம். ஆட்சிக்குவரும் கட்சிகளும் அது தொடர்பில் பேசக்கூடாது. அதிகாரங்களைப் பகிர்ந்தால் தனிநாட்டை நோக்கி பயணிக்கவேண்டிய நிலை உருவாகும். இவ்விவகாரங்கள் தொடர்பில் கூட்டமைப்புடன் பகிரங்க விவாதத்துக்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். கூட்டமைப்பும் விவாதத்துக்கு வரவேண்டும். கலந்துரையாடல், புரிந்துணர்வுமூலமே பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணலாம். " என்றார். (அ,44)

# சந்திரகுமார் அணி...

பில் மேலும் தெரியவருவதாவது, கண்டாவளைப் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் முன்னாள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது சுயேச்சைக்குழுவாகப் போட்டியிடுபவருமான சந்திரகுமாரின் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் அந்தப் பகுதியில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, " இது எங்களுடைய பகுதி. இதற்குள் கூட்டமைப்பு வர முடியாது. வந்தால் என்ன நடக்குமென இப்போது காட்டுகிறேன்" என கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவருக்கு, சந்திரகுமார் அணியைச் சேர்ந்த ஒருவர் தொலைபேசி மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதன் பின்னர் அவ்வாறு எச்சரிக்கை விடுத்த நபர் கண்டாவளைப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டியை நோக்கி இடியன் துப்பாக்கியால் சுட்டுள்ளார். சூட்டுச் சத்தம் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனநாயகம், மாற்றம் என மேடையில் முழங்கி வரும் சந்திரகுமார் அணியினரின் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்து அடாவடியாகச் செயற்படுவது அந்தப் பகுதி மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.(அ)

# ஓகஸ்ட் 11 இல்...

நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாம் வாரத்தில் அதாவது எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டப்படலாம் என கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் புதிய உறுப்பினர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை பொதுத்தே ர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி வெற்றி பெற்றால், மகிந்த ராஜபக்ச பிரதமராகப் பதவியேற்பார். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி வெற்றி பெற்றால், சஜித் பிரேமதாச பிரதமராகப் பதவியேற்பார். எந்த கட்சிக்கு ஆட்சியமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காது போனால், அரசாங்கம் பதவியேற்பது தாமதமாகும் எனக் கூறப்படுகிறது.(அ)

# படையினரின்...

போடப்பட்டு வாகனத்தில் பயணிப்போர் மறிக்கப்பட்டு ஆவணங்கள் முழுமையாகச் சோதனை செய்யப்பட்டன. இராணுவத்தினரோடு பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரும்,தேர்தல் நிறைவடைந்த பின்னரும் வன்முறை இடம்பெறலாம் என்று கணிக்கப்பட்ட பகுதிகளில் வடக்கு மாகாணமும் உள்ளடங்குவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் பல சுட்டிக் காட்டி யுள்ளமை குறிப்பிடத் தக்கது. (7)

## புதினம் தெரியுமோ?

ளவில் வந்திருந்தனர். ஆனால் ஒவ்வொரு பேச்சாளர்களும் பேச வரமுன்னரும், பேசி முடித்த பின்னரும் கூட்டத்துக்கு தலைமைதாங்கியவர் தானும் 'மைக்கைப்' பிடித்து பத்துப் பதினைந்து நிமிடங்கள் பேசிய பின்னரே கதிரைக்குப் போவார்.

இப்படியே அவரின் தொடர் சொற்பொழிவு நீண்டது. எல்லாப் பேச்சாளர்களும் பேசியாயிற்று. இனி கூட்டத்துக்கு காசு போட்ட, அந்தத் தொகுதியின் அமைப்பாளரான வேட்பாளர் மட்டுமே பேச வேண்டும். அதற்கிடையில் மீண்டும் 'மைக்' முன்னால் சென்ற கூட்டத்துக்கு தலைமை வகித்தவர், தேர்தலுக்கு சம்பந்தமேயில்லாத சில விடயங்களைப் பேசத் தொடங்கினார்.

அப்போது திடீரென பொலிஸார் அங்கு வந்து 10 மணி மட்டுமே கூட்டத்துக்கு அனுமதி. இ ப்போது 10 மணியாகிவிட்டது. எனவே கூட்டத்தை நிறுத்துங்கள் என உத்தரவிட, கூட்டம் அப்படியே முடிவுற்றது.பாவம் வேட்பாளர், சொந்தக் காசையும் போட்டு, ஆட்களையும் அழைத்து வந்து எல்லா ஏற்பாடும் செய்தும் கூட „ அவர் அந்தக் கூட்டத்தில் கடைசிவரை உரையாற்றவே முடியாமல் போனதை என்னவென்பது?

பட்சி

# இலங்கை மீது இன்னும்...

கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அவ்வொன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர கூறியவை வருமாறு,

" கூட்டமைப்பு உட்பட வடக்கில் உள்ள சில கட்சிகளில் இனவாதிகளே போட்டியிடுகின்றனர். அந்த இனவாதிகளை தோற்கடிப்பதற்கு அங்கு எமக்கு வாக்குப்பலம் இல்லாதபோதிலும், இனவாதிகளை கட்டுப்படுத்தக்கூடிய அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கான வாக்குவங்கி தெற்கில் உள்ளது. அதனை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இனவாதிகளின் மனம் இன்னும் மாறவே இல்லை. மக்களையும் தவறாக வழிநடத்திவருகின்றனர் . இந்நிலைமை மாறுவதற்கு இன்னும் காலம் எடுக்கும். எனவே, வடக்கு மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாறாக வேறொன்றையும் செய்ய வேண்டியதில்லை.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வழங்கியிருந்த இணை அனுசரணையில் இருந்தே இலங்கை அரசாங்கம் விலகியுள்ளது. ஆனால், பேரவையில் எமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உள்ளன. அந்த குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுபடவேண்டும். அதற்கான இராஜதந்திர நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். சிங்கள, பௌத்த மக்கள் அரசாங்கத்துக்கு பேராதரவை வழங்கினால், அதனை காண்பித்து ஜெனிவா நெருக்கடியில் இருந்து தப்பலாம்." என்றார். (அ-44)

# கல்விக் கட்டமைப்பு ஊழியர்களுக்கு தேசிய தொழில் அடையாள அட்டை

கொழும்பு, ஓக. 1

கல்விக் கட்டமைப்பில் சேவையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், தேசிய மட்டத்திலான தொழில் அடையாள அட்டையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெரும ஏற்கனவே, கல்வியமைச்சின் செயலாளருக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக, அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த அடையாள அட்டைகள், இலங்கையின் கல்வித்துறையில் சேவையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள், ஆசிரியர் பயிற்சியாளர்கள், ஆசிரியர் ஆலோசக அதிகாரிகளுக்கு வழங்கப்படவுள்ளது. நவீன தொழிநுட்பத்துடன் வடிவமைக்கப்படும் இந்த அடையாள அட்டைகளின் மூலம், கல்வித்துறையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு விசேடமான பல நிவாரண உதவிகள் கிடைக்கும் என கல்வியமைச்சு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.(ரி2)

## தனிமைப்படுத்தப்பட்ட...

பெண்ணொருவர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, யாழ்ப்பாணம் விடத்தல்பளை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை , அவருக்குப் பிரசவவலி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் இராணுவத்தினரால், யாழ்.போதனா மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டு, அங்குள்ள கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் அவர் குழந்தையை நேற்றுப் பிரச வித்துள்ளார். மகப்பேற்றின் பின்னர், குழந்தையும் தாயும் நலமாக இருப்பதாகவும், மருத்துவர்கள் தெரிவித்தனர். சிகிச்சை விடுதியில் தனிமைப்படுத்தல் சிகிச்சைக்காக எவரும் அற்ற நிலையில், தனியாக, கண்ணாடி பொருத்தப்பட்ட தனியான விடுதியில் இந்தத் தாய்க்கும் சேய்க்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (அ-106)



## கொரோனாக் காலத்தில் 7000 மாணவிகள் கருத்தரிப்பு

### அதிர்ச்சியில் மாலவி அரசு

கிழக்கு ஆபிரிக்க நாடான மாலவியில் ஐந்து மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் 7000க்கும் அதிகமான மாணவிகள் கருவுற்றுள்ளனர் என்று அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இதில் பல மாணவிகள் வயது 10ல் இருந்து 14 வயதுக்குள் உள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. இந்த தகவலை அரசு அதிகாரிகள் மற்றும் குழந்தைகள் உரிமை ஆர்வலர்கள் வெளியிட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் கொரோனா காரணமாக நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் மூட அரசாங்கம் உத்தரவிட்டது. இதன்பின்னரே மாணவிகள், சிறுமிகள் கருத்தரிப்பது அதிகரித்துள்ளது. பலோம்பே நகரில் மட்டும் இந்தக் காலகட்டத்தில் 1000 சிறுமிகள் கருவுற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-1)

# பக்தர்களே அயோத்திக்கு வராதீர்கள்!

## அறக்கட்டளை அறிவிப்பு



புதுடில்லி, ஓக.1

ராமர் கோவில் பூமி பூஜையை நேரில் காண அயோத்திக்கு பக்தர்கள் வரவேண்டாம் என்று ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை வேண்டுகோள் விடுத்துள்ளது. அயோத்தியில் ராமர் கோவில் கட்ட, உச்சநீதிமன்றம் அனுமதி அளித்ததைஅடுத்து அதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை மற்றும் அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று அடிக்கல் நட உள்ளார். இந்நிலையில், ராமர் கோவில் பூமி பூஜை நடைபெறும் நிகழ்ச்சியை நேரில் காண பக்தர்கள் அயோத்திக்கு வர வேண்டாம் என ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை வேண்டுகோள் விடுத்துள்ளது. கொரோனா தொற்றுக் காரணமாக தற்போது பக்தர்கள் கலந்து கொள்ள முடியாத சூழல் உள்ளது என்றும், அடிக்கல் நடும் விழா தொலைக்காட்சி மற்றும் இணைய தளத்தில் நேரலை செய்யப்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.





## மதுவுடன் தொற்றுநீக்கியை கலந்து அருந்திய


# 9 பேர் சாவு


புதுடில்லி, ஓக. 1

இந்தியாவில் ஆந்திரா மாநிலத்தில் மதுபானத்துடன் தொற்றுநீக்கியை (சனடைஷர்) கலந்து குடித்த 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனாவால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் சிலர் போதைக்காக மாற்றுவழிகளைத் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவின் ஆந்திராவின் பிரகாசம் மாவட்டம் குரிசெடு கிராமத்தில், என்ற போதைக்காக, மதுபானத்துடன் சிலர் தொற்றுநீக்கியை கலந்து குடித்துள்ள னர். இதில், 9 பேர் உயிரிழந்ததுள்ளனர். அதில் 3 பேர் யாசகர்கள் எனவும், ஏனையவர்கள் குரிமேடு கிரா மத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (ரி1)

# ஒரே படத்தில் 7 விக்ரம்





அஜய் ஞானமுத்து இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் கோப்ரா படத்தின் ஃப்ர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது.

கடாரம் கொண்டான் படத்தை அடுத்து விக்ரம் நடிக்கும் 'கோப்ரா' படத்தை "இமைக்கா நொடிகள்' பட இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கி வருகிறார். இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

இந்தப் படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக 'கே.ஜி.எப்' புகழ் ஸ்ரீநிதி ஷெட்டி நடித்து வருகிறார். தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மூன்று மொழிகளில் தயாராகி வரும் இந்தப் படத்தில் பிரபல கிரிக்கெட் வீரர் இர்ஃபான் பதான் நடிகராக அறிமுகமாகிறார்.

பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் "கோப்ரா' படத்தின் முதல் போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் போஸ்டரில் 7 வேடங்களில் விக்ரம் காட்சியளிக்கிறார்.

ஏழு வேடங்களும் ஒவ்வொரு ரகமாக இருக்கின்றன. உடைந்தது சிதறும் கண்ணாடியைப் பார்த்து உரக்க கத்தும் விக்ரம் ஏழு விதமான கெட்டப்புகளில் காட்சிதருகிறார். சில வேடங்களில் தமிழ் நிலத்தைக் கடந்த வயது முதிர்ந்த மனிதர்களின் முகச்சாயலில் அவரது முகம் இருக்கிறது. ஏழு வேடங்களில் வெளியாகியுள்ள முதல் போஸ்டர் கோப்ரா படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.



# கோலி முதலிடம்

புதுடில்லி, ஓகஸ்ட் 1

ஐ.சி.சி வெளியிட்ட ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 871 புள்ளிகளுடன் இந்திய அணியின் கப்டன் விராட் கோலி முதல் இடத்திலும், 855 புள்ளிகளுடன் துணைக் கப்டன் ரோஹித் ஷர்மா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

டெஸ்ட் போட்டிக்கான தரவரிசையில் விராட் கோலி இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். முதல் இடத்தை ஆஸ்திரேலிய வீரர் ஸ்மித் தக்கவைத்துள்ளார். ரி20 தரவரிசையில் கே.எல்.ராகுல் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். விராட், ரோஹித் முறையே 10, 11 ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர். முதல் இடத்தை பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் கைப்பற்றியுள்ளார்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை வேகப்பந்து வீச்சாளர் பும்ரா ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் 719 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், டெஸ்ட் தரவரிசையில் 8 ஆவது இடத்தையும், ரி20 போட்டிகளில் 13 ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்.

பும்ராவை தவிர மற்ற இந்தியப் பந்துவீச்சாளர்கள் முதல் பத்து இடங்களுக்குள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அணிகளுக்கான தரவரிசையில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் 3 ஆவது இடத்தையும், ஒருநாள் போட்டிகளில் இரண்டாவது இடத்தையும், ரி20 போட்டிகளில் 3 ஆவது இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் அசத்திய இங்கிலாந்து வீரர் ஸ்டுவர்ட் பிரோட் ஏழு இடங்கள் முன்னேறி மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார். (ரி2)

# ரோஹித் ஷர்மாவே அடுத்த டோனி



புதுடில்லி, ஓகஸ்ட் 1

இந்திய கிரிக்கெட் அணியின் அடுத்த டோனி, ரோஹித் ஷர்மா தான் என இந்தியக் கிரிக்கெட் வீரரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உப தலைவருமான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நான் ரோஹித் ஷர்மாவின் செயற்பாடுகளை பார்த்து இருக்கிறேன். அவர் மிகவும் அமைதியானவர், மற்றவர்களின் கருத்தைக் கேட்கக்கூடியவர். சக வீரர்களுக்கு நம்பிக்கை அளிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக தானே முன்னின்று அணியை வழிநடத்துவதில் திறமை மிக்கவர். அணியை முன்னின்று நடத்துவதுடன், வீரர்களின் ஒய்வறைச் சூழலுக்கும் மதிப்பு அளிப்பவர். இவ்வாறு செயற்படும் போது, நீங்கள் எல்லாம் கிடைத்தது போன்று உணர்வீர்கள். அவர் அனைவரையுமே அணித்தலைவராக நினைப்பார். அவரது தலைமைத்துவத்தன்மையை நான் பார்த்து இருக்கிறேன்.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தமது அணி கிண்ணத்தை வென்றபோது அவரது தலைமையின் கீழ் நான் விளையாடியிருக்கிறேன்.

இளம் வீரர்களான ஷர்துல் தாக்கூர், வொஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல் ஆகியோருக்கு அவர் எந்த அளவுக்கு நம்பிக்கை அளித்தார் என்பதை பார்த்து இருக்கிறேன்.

டோனிக்கு அடுத்து முன்னணி வீரர்களில் ஒருவராக ரோஹித் ஷர்மா விளங்குகிறார். டோனி புத்திசாலியான தலைவர். ஆனால், டோனியையும் விட அதிக ஐ.பி.எல். கிண்ணத்தை ரோஹித் ஷர்மா வென்றுள்ளார்.

இருவருடைய தலைமைத்துவப் பண்பும் ஒரே மாதிரி தான் இருக்கும். இருவருமே மற்றவர்களின் கருத்தை உள்வாங்கி தீர்மானம் எடுக்கக்கூடியவர்கள்.

தலைவர்கள் மற்றவர்கள் சொல்வதை கவனித்தாலே நிறைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அத்துடன் வீரர்களின் மனரீதியான பிரச்சினைகளையும் சமாளிக்க முடியும். என்னைப் பொறுத்தமட்டில் இருவருமே அற்புதமான அணித் தலைவர்கள் - என்றார். (ரி2)

# கோலி, தமன்னாவுக்கு எதிராக வழக்கு

புதுடில்லி, ஓகஸ்ட் 1

இணைய சூதாட்ட விளம்பரங்களில் நடித்துள்ள இந்திய கிரிக்கெட் அணிக் கப்டன் விராட் கோலி, நடிகை தமன்னா ஆகியோரைக் கைது செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சட்டத்தரணி சூரியபிரகாசம், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர் தெரிவித்திருப்பதாவது;

இணைய சூதாட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும். இணைய சூதாட்டம் தொடர்பான விளம்பரங்களில் நடித்த கோலி, தமன்னா போன்றோரைக் கைது செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மனு மீதான விசாரணை ஓகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ரி2)



# முகக்கவசம் மாதிரி!



கொரோனாவுக்கெனத் தடுப்பு மருந்து எதுவும் இல்லை. முகக்கவசமும் கைகளைக் கழுவுவதும் தான் இன்றைய ஒரே தடுப்பு உத்தி. எனவே, மக்களின் அன்றாடத் தேவையில் அத்தியாவசியமாகிவிட்டன முகக்கவசங்கள். இந்த கொரோனா காலத்தில் உலகில் விதவிதமான முகக்கவசங்கள் உலாவந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் கவனம் ஈர்த்த சில முகக்கவசங்கள்:

**முகம் போன்றதொரு முகக்கவசம்**

கொரோனாவைத் தடுக்க தாடை, வாய்ப் பகுதி, மூக்குவரை முகக்கவசத்தால் மறைக்க வேண்டியிருப்பதால், தங்கள் அழகு முகத்தை வெளிக்காட்ட இயலவில்லையே என்ற ஏக்கம் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு மூக்கு முதல் தாடைவரை தங்களுடைய உண்மையான முகத்தை அச்சிட்டுத் தரும் முகக்கவசம் ஒன்று அறிமுகமாகியுள்ளது. அது போன்றதொரு முகக்கவசத்தை இளம் பெண் ஒருவர் குவைத் விமான நிலையத்தில் அணிந்துவர, அது சமூக ஊடகங்களில் வைரலானது.

**பன்றி முகம்**

குழந்தைகளுக்கு விளையாட்டாக விதவிதமான உருவங்களில் முகக்கவசங்களை மாட்டி விடுவதுபோல், ஜப்பானில் பன்றியின் முகத்தைக்கொண்டே உருவாக்கப்பட்ட முகக்கவசங்கள் வலம்வரத் தொடங்கியுள்ளன. இரு இளைஞர்கள் இது போன்ற முகக்கவசத்தை மாட்டிக்கொண்டு தலைநகர் டோக்கியோவில் வலம்வர, அந்தப் படம் சமூக ஊடகங்களில் ஹிட் அடித்துள்ளது.



**தண்ணீர் கேன் கவசம்**

சென்னையில் தண்ணீர் கேன் இல்லாத வீடுகளே கிடையாது. அந்த கேனையே பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் முகக்கவசமாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். முகத்துக்கு ஏற்றாற்போல் தண்ணீர் கேனை வெட்டி, தலை முதல் நெஞ்சுப் பகுதிவரை மறைத்துக் கொள்கிறார்கள். இவர்களைப் போல உலகின் பல நாடுகளிலும் விதவிதமான பொருள்களில் முகக்கவசங்களை உருவாக்கி அணிந்துவருவது அதிகரித்தவண்ணம் உள்ளது. கொரோனா தொற்று இல்லாத உலகம் உரு வாகும்வரை, இதுபோன்ற விந்தையான முகக்கவசங்களை நாம் தொடர்ந்து பார்க்க நேரிடலாம்!

